யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூலை- 2015
## Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | அரசியல் விஞ்ஞானம் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ *1 - 10* **வரையுள்ள வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களுள் நான்கு சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

*01)* அரசியல் விஞ்ஞானம் என்பது
A - தலையாய விஞ்ஞானமாகத் திகழ்கிறது
B - கிரேக்க காலத்தில் முறையாகக் கற்க ஆரம்பிக்கப்பட்டது
C - இருபதாம் நூற்றாண்டில் நவீன கற்கைத்துறையாகிறது
D - அரசு, அரசாங்கம் என்பவை பற்றி ஆராய்கிறது
E - சமூக, ஆன்மீக ரீதியிலான நடத்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது
*(1)* ABCD *(2)* ACBE *(3)* ADBE *(4)* BCDE *(5)* ACDE

*02)* அரசு என்பது
A - சேமநலன் பேணும் அமைப்பாகும்
B - சமூக நிறுவனங்களோடு ஒத்த தன்மையுடையதாகும்
C - மேலான அதிகாரத்தைக் கொண்ட நிறுவனமாகும்
D - வரையறுக்கப்பட்ட ஆள்புலத்தைக் கொண்டதாகும்
E - நிலையானதொரு ஸ்தாபனமாகும்
*(1)* ABCD *(2)* ACDE *(3)* ADBE *(4)* BCDE *(5)* ABCE

*03)* அரசாங்கம் என்பது
A - அரசினுடைய நடைமுறைக்கரமாகும்
B - அரசாங்கம் சட்டம் சார்ந்த நிறுவனமாகும்
C - வேறுபட்ட வடிவங்களைக் கொண்டதாகும்
D - அரசாங்கத்தின் உறுப்புரிமை கட்டாயமானதாகும்
E - நிலையில்லாத சமூக நிறுவனம் ஆகும்
*(1)* ABCD *(2)* ACDE *(3)* AEDB *(4)* ABCE *(5)* BCDE

*04)* சமுதாய ஒப்பந்தக் கோட்பாடானது
A - சமுதாயத்தில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவினதாகும்
B - கொப்ஸ், லொக், ரூசோ போன்ற அறிஞர்களால் முன்வைக்கப்பட்டது
C - மன்னன் கடவுளின் பிரதிநிதியாவான்
D - இயற்கை நிலையில் மக்களது வாழ்க்கை பற்றியும் கூறுகிறது
E - முடியாட்சி, வரையறுக்கப்பட்ட முடியாட்சி, மக்களாட்சி முறைகளைச் சுட்டி நிற்கிறது
*(1)* ABCD *(2)* BCDE *(3)* ABDE *(4)* ACDE *(5)* ABCE

*05)* சமூக ஜனநாயக அரசியல் யாப்பானது
A - தாராண்மை ஜனநாயக அம்சமும் சமதர்ம அம்சமும் இணைந்தது
B - 2ம் உலக யுத்தத்தின் பின்னர் உருவானது
C - பொருளாதார முகாமைத்துவத்தில் அரசின் தலையீடு காணப்படும்
D - இனவாதம் மேலோங்கியது
E - அரசியல் யாப்பில் யாப்பு கட்டுப்பாடு, நீதித்துறை சுதந்திரம் காணப்படும்

(1) ABCD (2) ACDE (3) ADBE (4) AEBC (5) BCDE

06) கபினற் அரசாங்கமுறை

A - பிரதம மந்திரியின் தலைமையில் அமைச்சரவை செயற்படுகிறது

B - சட்டத்துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் நெருங்கிய தொடர்பு

C - பிரதமரின் ஆட்சிமுறையாக விருத்தியடைந்துள்ளது

D - நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் நிறைவேற்றுத்துறை அதிகாரத்திலிருந்து நீக்கப்படலாம்

E - இதன் செயற்பாட்டுக்குச் சட்டசபையின் ஒத்தழைப்பு அவசியமில்லை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

07) குறைந்த பட்ச அரசு என்பது

A - 1970 களின் பின்னர் விருத்தியடைந்த எண்ணக்கருவாகும்

B - பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து அரசு முடியுமானவரை விலகியிருத்தல்

C - மில்ட்டன் ப்ரீட்மன் என்பவரின் சிந்தனை இதற்கான சட்டப் பின்னணியை வழங்கியது

D - தலையிடா அரசு, நலன்புரி அரசு என்பவற்றுக்கு இடையிலான இடைநிலை அரசு முறையாகும்

E - சமதர்ம அரசு முறையின் ஒரு வடிவமாகும்

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

08) இலங்கையின் சமய மறுமலர்ச்சி இயக்கமானது

A - 1915 களில் வீழ்ச்சியடைந்தது

B - கிறிஸ்தவ மத பரம்பலை தடுத்தது

C - சுதேச மதத்தவர்களால் கட்டியெழுப்பப்பட்டது

D - கலாசார ரீதியிலான தேசிய வாதத்தை கட்டியெழுப்பியது

E - தேசிய காங்கிரஸ் தோற்றம் இதன் வீழ்ச்சிக்கு காரணமாகியது

(1) ABCD (2) ACDE (3) ABDE (4) ACBE (5) BCDE

09) கோல்புறூக் கமறன் சீர்திருத்தமானது உருவாக்கப்பட்டதால்

A - நாட்டில் நிர்வாகம் பலவீனமடைந்தது

B - இராஜகாரியமுறை நீக்கப்பட்டது

C - பெருந்தோட்டத்துறை விருத்தியடைந்தது

D - வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டது

E - ஒரேவகையான நீதிமுறை உருவாக்கப்பட்டது

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ADBE (5) ACBE

10) குறுமக்கலம் அரசியல் சீர்திருத்தம்

A - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கியது

B - உத்தியோக பற்றற்ற உறுப்பினர்களை அதிகரித்தது

C - படித்த இலங்கையர் தெரிவு முறைக்கு வாய்ப்பளித்தது

D - இலங்கைத் தலைவர்களால் உருவாக்கப்பட்டது

E - தகுதிவாய்ந்த வாக்காளர்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பினை வழங்கியது

(1) ABCD (2) ACDE (3) ADBE (4) ACBE (5) BCDE

❖ ***11 - 15 வரையான வினாக்களுக்கு பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.***

11) நல்லாட்சி ஒன்றின் பிரதான அம்சங்களாவன

(1) வெளிப்படைத் தன்மை (2) பொறுப்புக்கூறல்

(3) ஆதிக்கவாதம் (4) சுதந்திரமான நீதித்துறை

(5) சட்டவாட்சி

12) விகிதாசாரத் தேர்தல் முறை என்பது
(1) பல கட்சிமுறையின் தோற்றத்திற்கு வழிவகுத்தது
(2) சிறிய, செல்வாக்கு குறைந்த கட்சிகளுக்கு சாதகமானது
(3) கூட்டரசாங்கம் உருவாக ஏதுவாகிறது
(4) பிரதிநிதிகளுக்கும் வாக்காளருக்கும் இடையே அண்மித்த தொடர்புடன் செயற்படுகிறது
(5) பிரதிநிதிகள் மக்களுக்கு பொறுப்புக் கூறக் கடமைப்பட்டவர்கள்

13) நேரடி ஜனநாயக உத்திகளாவன
(1) தேர்தல் முறை (2) குடிமுனைப்பு (3) ஒப்பங்கோரல்
(4) மீளழைத்தல் (5) ஆரம்ப மக்கள் மன்றுமுறை

14) மனிங் அரசியல் சீர்திருத்தம்
(1) சட்டசபை உறுப்பினர் எண்ணிக்கை 37 ஆக அதிகரித்தது
(2) உத்தியோக பற்றற்ற உறுப்பினர் அதிகரிக்கப்பட்டனர்
(3) மாகாண ரீதியிலான அங்கத்தவர் தெரிவு அறிமுகப்படுத்தப்பட்டது
(4) அரசுக் கழகம் உருவாக்கப்பட்டது
(5) பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகமானது

15) இலங்கையில் இடதுசாரி இயக்கம்
(1) சூரியமல் இயக்கத்துடன் பிரபல்யம் அடைந்தது
(2) 1940 களிலேயே தோற்றம் பெற்றது
(3) சமதர்ம சோசலிச கொள்கையைக் கொண்டிருந்தது
(4) மேற்கத்தைய நாடுகளில் கல்விகற்ற இளைஞர்களால் உருவாக்கப்பட்டது
(5) ஆரம்பத்தில் நகர்ப்புற பிரதேசத்தில் பரவியது

❖ **16 - 20 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க.**

16) எளிய பெரும்பான்மைத் தேர்தல் என்பது
(1) பட்டியல் முறையில் நடைபெறுகிறது
(2) பிரதிநிதிகள் மக்களுக்கு பொறுப்புக் கூறக்கூடியவர்கள்
(3) இலங்கையில் தற்போதும் நடைமுறையில் உள்ளது
(4) தொகுதிவாரி முறை என அழைக்கப்படும்
(5) சகல அபிப்பிராயங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படும்

17) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தாத அம்சம்
(1) குடும்பம் (2) சமூக நிறுவனங்கள் (3) அரசியற் கட்சிகள்
(4) அமுக்கக் குழுக்கள் (5) ஆலயங்கள்

18) இலங்கை முழுவதனையும் தமது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தவர்கள்
(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) பிரித்தானியர்
(4) பிரான்சியர் (5) சீனர்

19) சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதன் விளைவு அல்லாதது
(1) மக்கள் பங்கேற்பு வெகுவாக குறைந்தது
(2) அரசியற் கட்சிகள் உருவாக்கப்பட்டமை
(3) மக்கள் நலன்புரி திட்டங்கள் உருவாக்கப்பட்டது
(4) ஜனநாயகத் தன்மை மேலோங்கியது
(5) தொழிற்சட்டங்கள் உருவாக்கப்பட்டது

20) தாராண்மை அரசானது
(1) அரசுக்கே முதலிடம் வழங்குகிறது
(2) சமதர்மக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது
(3) தனநபர் சுதந்திரத்திற்கு முன்னுரிமை வழங்குகிறது
(4) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(5) உற்பத்தி தீர்மானம் அரசால் மேற்கொள்ளப்படும் (20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **B, C பகுதிகளிலிருந்து எவையேனும் ஒவ்வொரு வினாக்களைத் தெரிவு செய்து இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### B பகுதி

01)

(i) அரசறிவியலின் பாடப்பரப்பினைச் சுருக்கமாக விளக்குக.

(ii) அரசியல் பயிலும் முறைகளை எடுத்துக் கூறுக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

02) பின்வருவனவற்றுள் இரண்டினைப் பற்றிக் கருத்துரைக்குக.

(i) பாசிசக் கோட்பாட்டில் தனிமனித நிலை

(ii) அரசியல் சமுதாயப்படுத்தல்

(iii) ஜனநாயகத்தின் வகைகள்

(iv) உரிமைகளும் அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறைகளும்

(10 x 2 = 20 புள்ளிகள்)

### C பகுதி

03)

(i) பிரித்தானியர் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களை பரிசீலிக்குக.

(ii) டொனமூர் யாப்புக் காலத்தில் முக்கிய அம்சங்களுள் ஒன்றான நிர்வாக குழுமுறை பற்றி கருத்துரைக்குக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

04) பின்வருவனவற்றுள் இரண்டினைப் பற்றிக் கருத்துரைக்குக.

(i) சமய மறுமலர்ச்சி இயக்கங்கள்

(ii) சர்வஜன வாக்குரிமை

(iii) இலங்கை தேசிய காங்கிரசின் தோற்றம், வளர்ச்சி

(iv) இலங்கை இடதுசாரி இயக்கம்

(10 x 2 = 20 புள்ளிகள்)